தமிழ் மொழியும் இலக்கியமும்

இலக்கணப் பகுதியை சார்ந்து விளக்கக் குறிப்புகள்

(பகுதி I,II)

தரம் 10,11

தொகுப்பாக்கம்

இரா. நிஷாந்தன்

ஆசிரியர்

கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்



தமிழ், இலக்கணம் ~ பகுதி I

✍ ஒத்தகருத்துச் சொற்கள்.

1. தண்டாமரை	- குளிர்ச்சியுடைய தாமரை
2. மண்டூகம்	- தவளை
3. புல்லர்	- அறிவில்லாதவர்
4. கயம்	- குளம்
5. சினை	- முட்டை
6. அண்ணல்	- பெருமை மிக்க/தலமை உடைய
7. புரவி	- குதிரை
8. பிணக்கு	- குழப்பம், முரண்பாடு
9. பீதாம்பரம்	- பட்டாடை, பொன்னாடை
10. கேண்மை	- நட்பு
11. கனல்	- நெருப்பு
12. மடங்கல்	- ஆண் சிங்கம்
13. விடை	- காளை
14. பொன்னுடகம்	- பொன்மலை. மகாமேரு மலை
15. நாகம்	- ஆண்யானை
16. நாணல்	- வெட்கமடைதல்
17. நித்திலம்	- முத்து
18. மதன்	- மன்மதன்
19. வதனம்	- முகம்
20. பழனம்	- வயல்
21. அமராபதி	- விண்ணுலகம், சொர்க்க நகரம்
22. வெங்கண் பிறை	- வெண்மையான/இளம் பிறைச்சந்திரன்
23. கரும்இறை	- மன்மதன்
24. மால், மாயன்	- திருமால்
25. விழி	- கண்
26. மந்தி	- பெண்குரங்கு
27. வானவர், வான்கவி	- அமரர்கள், தேவர்கள்
28. செங்கதிரோன்	- சூரியன்
29. பரிக்கால்	- குதிரைக்கால்
30. புனலருவி	- நீர்வீழ்ச்சி
31. கிம்புரி	- ஆண்யானை
32. புவனம்	- உலகம், பூமி
33. மேழி	- கலப்பை, செல்வம்
34. தம்பிரான்	- சிவபெருமான்

www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

35. செவிலி - வளர்ப்புத்தாய்
36. பேடை - பெண் அன்னம்
37. ஏதம் - குற்றம், கேடானவை
38. அளறு - நரகத்துன்பம், நரகம்
39. ஏதிலார் - உறவில்லாதவர்
40. தமர் - உறவினர்
41. பீழை - துன்பம்
42. பள்ளி - படுக்கை
43. வையம் - தேர், வண்டி
44. ஊரன் - தலைவன்
45. செறிதல் - இறுகுதல்
46. இளையோர் - சிறுவர்கள்
47. திணிமணல் - செறிந்தமணல்
48. கயம் - குளம், பொய்கை
49. ஆயம் - கூட்டம்
50. திரையகம் - நீர்த்துளிகள்
51. கதி - நற்கதி, வீடுபேறு, முக்தி
52. வரிசை - புகழ்
53. அயின்னம் - ஐக்கியம், ஒருமைப்பாடு
54. துல்லியம் - தெளிவு
55. செந்தர்யம் - அழகு
55. தேஜஸ் - ஒளி
56. பரிந்து - இரக்கம் காட்டுதல்
57. கோதி - உறிஞ்சி
58. நறுமது - இனிய தேன்
59. புளகம் - மெய்சிலிர்த்தல்
60. சதுராடும் - நடமாடும்
61. பகலவன் - சூரியன்
62. நிர்மலம் - தூய்மை, மலங்களற்ற தன்மை
63. பரிதி - சூரியன்
64. ஜாலம் - அழகு, மாயவித்தை
65. திங்கள் - மாதம்

✍ எதிர்கருத்துச் சொற்கள்

01. அகழ்தல் - தூர்த்தல்
02. அச்சம் - துணிவு
03. அமைதி - குழப்பம்
04. அறம் - மறம்
05. ஆத்திகன் - நாத்திகன்
06. இகழ்ச்சி - புகழ்ச்சி
07. இம்மை - மறுமை
08. உதாசீனம் - அக்கறை
09. தமர் - பிறர்
10. சத்தியம் - அசத்தியம்
11. காய்தல் - உவத்தல்
12. கதி - நிர்க்கதி
13. ஈதல் - இரத்தல்
14. இணக்கம் - பிணக்கம்
15. தமர் - பிறர், அயலவர்
16. கேண்மை - பகைமை
17. மூதாளர் - இளைஞர், இளையவர்
18. புல்லர் - அறிவுடையார், அறிவுடையோர்
19. ஆதரவு - நிராதரவு
20. கலக்கம் - தெளிவு

www.ikedu.lk

✍ எதிர்பாற் சொற்கள் – உயர்திணை

1. பாணன்	-	பாடினி
2. குறவன்	-	குறத்தி
3. ஜயன்	-	ஜயை
4. ஆயன்	-	ஆய்ச்சி
5. தலைவன்	-	தலைவி
6. தபுதாரன்	-	விதவை
7. அப்பன்	-	அம்மை
8. இரவலன்	-	இரவலள்
9. உழவன்	-	உழத்தி
10. குணவான்	-	குணவதி
11. கோமான்	-	கோமாட்டி
12. தேவராளன்	-	தேவராட்டி
13. நிபுணன்	-	நிபுணை
14. இடையன்	-	இடைச்சி
15. பகவான்	-	பகவதி
16. பிரான்	-	பிராட்டி
17. மறவன்	-	மறத்தி
18. வலைஞன்	-	வலைச்சி
19. வேடன்	-	வேடுவிச்சி
20. விருத்தன்	-	விருத்தை
21. மருத்துவன்	-	மருத்துவிச்சி
22. பண்டிதன்	-	பண்டிதை
23. பொன்னன்	-	பொன்னி
24. வேடன்	-	வேடுவிச்சி
25. அரக்கன்	-	அரக்கி

✍ எதிர்பாற் சொற்கள் – அ:றிணை

பிராணி	ஆண்	பெண்
1. நண்டு	- அலவன்	- பெடை
2. மாடு	- எருது, ஏறு	- பசு
3. ஆடு	- கடா	- மறி
4. குரங்கு	- கடுவன்	- மந்தி,
5. மான்	- கலை	- பிணை
6. யானை	- களிறு	- பிடி
7. குதிரை	- குண்டு	- வடவை
8. கோழி	- சேவல்	- பேடு
9. புலி	- போத்து	- பிணா, அளகு
10. நரி	- ஓரி	- பாட்டி
11. சிங்கம்	- ஏறு	- பெட்டை
12. மயில்	- போத்து	- அளகு
13. பன்றி	- ஒருத்தல்	- பிணை

www.ikedu.lk

✍ மரபுப் பெயர்கள்

☞ இளமை மரபுப் பெயர்கள்

01. அணில் - பிள்ளை, குஞ்சு
02. ஓணான் - குட்டி
03. கத்தரி - நாற்று
04. புகையிலை - நாற்று
05. மிளகாய் - நாற்று
06. மக்கள் - குழவி, குழந்தை
07. நெல் - நாற்று
08. கரடி - குட்டி
09. யானை - குட்டி, போதகம்
10. சிங்கம் - குருளை

☞ கூட்டத்தை குறிக்கும் மரபுப் பெயர்கள்

01. அறிஞர் - அவை
02. ஒளி - கற்றை
03. கரும்பு - கொல்லை
04. பறவை - தொகுதி
05. மயில் - குழாம்
06. உடு - திரள்
07. தென்னை - தோப்பு
08. மா - சோலை, தோப்பு
09. முத்து - குவியல்
10. புகையிலை - சிப்பம்

✍ மரபுத் தொடர்

01. அகலக் கால் வைத்தல் - அளவு கடந்து போதல
02. அமளி செய்தல் - குழப்பம் செய்தல்
03.ஆழம் பார்த்தல் -திறமையை ஆராய்தல்
04. உச்சி குளிர்தல் -மகிழ்தல்
05. கைதட்டி விடுதல் - நீக்கி விடுதல்
06. கைதேர்தல் - திறமை மிகுதல்
07. தட்டிப்பார்த்தல் - இரகசியம் அறிய முற்படல்
08. தலைதடவுதல் - ஏமாற்றுதல்
09. துறைபோதல் - நிரம்பக் கற்றல்
10. தட்டிக் கொடுத்தல் - உற்சாகமூட்டுதல்
11. காலூன்றுதல் - நிலைத்து நிற்றல்
12. அடியொற்றுதல் - பின்பற்றுதல்
13. அள்ளியிறைத்தல் - அதிகமாக கொடுத்தல்
14. உதவாக்கரை - பயனற்றவன்
15. ஓடெடுத்தல் - பிச்சையெடுத்தல்
16. கண்கூடு - வெளிப்படை
17. கண்ணோட்டம் - இரக்கம்
18. கண் திறத்தல் - அறிவு உண்டாதல்
19. கரையேறுதல் - உய்வடைதல்
20. காது கொடுத்தல் - அவதானித்துக் கேட்டல்
21. காலூன்றுதல் - நிலைத்து நிற்றல்
22. கைதேர்தல் - திறமை மிகுதல்
23. தட்டிக்கேட்டல் - நியாயம் கேட்டல்
24. நாக்குப்புரளுதல் - வாக்குத் தவறுதல

www.lkedu.lk

✍ தொடர் மொழிக்கு ஒரு மொழி

01. அகராதி - சொற்களுக்கு அகர வரிசைப்படி பொருள் கூறும் நூல்

02. அஞ்ஞாதவாசம் - பிறர் அறியா வண்ணம் மாறுவேடம் ஏற்று மறைந்து வாழ்தல்

03. அழைப்பாணை விடுக்கும் கட்டளை. - குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்திற்கு வருமாறு ஒருவருக்கு நீதிபதி

04. அங்கதம் - வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறை பொருளில் இகழ்ந்தும் கூறுவது.

05. அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை

06. ஆசுகவி - எடுத்த எடுப்பிலலேயே கவி பாடும் ஆற்றல் மிக்கவர்

07. ஆதனம் - ஒருவருக்கு உரித்தான நிலம் முதலான சொத்துக்கள்

08. உரைகல் - பொன்னை உரைந்து அதன் தரத்தை அறிய பயன்படும் ஒரு வகைக் கல்

09. எய்ப்பில் வைப்பு - பிற்காலத் தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள்

10. ஏகபோகம் - தனக்கே உரிமையாக முழுப்பொருளையும் அனுபவித்தல்

11. பட்டிமன்றம் - அறிஞர் பலர் கூடி வாதிடும் களம்

12. வடக்கிருத்தல் - உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி இருத்தல்

13. மானியம் - அரச மக்களின் நலன் கருதி வழங்கும் உதவித் தொகை

14. ஓய்வூதியம் - இளைப்பாறிய அரச உத்தியோகத்தவர்க்கு மாதாமாதம் வழங்கப்படும் நிதி.

15. பௌராணிகன் - புராணக்கதையை சுவைபட பிரசங்கம் செய்வோன்

16. மஞ்சரி - ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து

17. நைட்டிகன் - ஆயுள் முழுவதும் பிரம்மச்சரியம் காத்து வாழ்வோன்.

18. நிகண்டு - சொற்களின் பொருளை செய்யுள் வடிவில் திரட்டித் தரும் நூல்

19. தீர்க்கதரிசி - எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவன்

20. ஓம்படை - பேணிக்காத்து தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்

21. ஓலக்கம் சூழ வீற்றிருத்தல் - அரசன் சபாமண்டபத்தில் அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலியோர்

22. திறைசேரி - அரசன் நிதி சேகரித்து வைக்கும் இடம்

23. பொதுவியல் - பொதுமக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து வகை

24. மெய்க்கீர்த்தி - கல்லிலோ, செப்பேட்டிலோ செதுக்கப்படும் புகழ்மொழி

25. வரகவி - இறைவன் அருள் பெற்று கவிபாடும் ஆற்றல் பெற்றவன்

26. ஆதுலர் சாலை - வறியவர்க்கும், அங்கவீனர்களுக்கும், முதியோருக்கும் உண்டியும், உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.

www.ikeou.lk

பகுதி II குறு வினாப் பகுதி

01. பின்வரும் தொடர்களை சந்திபிரித்து எழுதுக.

1.“ தேனருவி திரையெழும்பி வானின் வழி யொழுகும்”

✍ தேன் அருவி திரை எழும்பி வானின் வழி ஒழுகும்

2. “ பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் ”

✍ பனை ஓலை பாயில் படுத்து உறங்கும்

3. “ பொலிந்த செழுந் தாதிறைக்கும் ”

✍ பொலிந்த செழும் தாது இறைக்கும்

4. “ பெண்களடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார் ”

✍ பெண்கள் தொழிலாம் என்றே பேசிடுவார் ஒரு சாரார்

5. “ ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும் ”

✍ ஆடி குடத்தை அடையும் ஆடும் போதே இரையும்

6. “ புனலருவி கழங்கெனமுத் தாடும் ”

✍ புனல் அருவி கழல் என முத்து ஆடும்

7. “ கரும்பிறைக்கும் மெலிந்தம் பிறைக்கும் ”

✍ கரும்பு இறைக்கும் மெலிந்து அம்பு இறைக்கும்

8. “ ஆவிபோ லாடையுமொன் றானதே”

✍ ஆவி போல் ஆடையும் ஒன்று ஆனதே

9. “ பனையின் றிரள்பழத் தொருவிதை”

✍ பனை இன் திரள் பழத்து ஒரு விதை

10. “ மானேங்கு மைவிழியென் வஞ்சியிடை”

✍ மான் ஏங்கு மை விழி என் வஞ்சி இடை

11. “ தண்டா மரையுடன் பிறந்தும் தண்டேன் ”

✍ தண் தாமரை உடன் பிறந்தும் தண் தேன்

12. “ பாய் தட்டிழைக்கப் பழகிக் கொண்டாள் ”

✍ பாய் தட்டு இழைக்க பழகி கொண்டாள்

13. “ போரெடுத்து வருமதன் முன்செல”

✍ போர் எடுத்து வரும் மதன் முன் செல்ல

14. “ குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பான் ”

✍ குன்று அனைய திரு நெடும் தோள் குகன் என்பான்

15. “ நீங்க ளைவீரு மொருவீரா யகலிடத்தை”

✍ நீங்கள் ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை

www.lkedu.lk

16. “ சுடுமாயனத் திடை தன் றுணையேக”

✍ சுடும் மயானத்து இடை தன் துணை ஏக

17. “ இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினர் ”

✍ இருவரும் மாறி புக்கு இதயம் எய்தினர்

18. “ நீரெ டுத்து வருவதற் கவள் ”

✍ நீர் எடுத்து வருவதற்கு அவள்

19. “ பங்கப் பழனத் துழுமுழுவர்”

✍ பங்கம் பழனம் உழும் உழவர்

20. “ கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் ”

✍ கழியும் பிழை பொருள் தள்ளி நல் நூலாம்

21. “ இனிநினைந் திரக்க மாகின்று”

✍ இனி நினைந்து இரக்கம் ஆகின்று

23. “ என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம் பெண்ணரசி ”

✍ என் இதய தாமரைக்கு ஓர் இலக்குமியாம் பெண் அரசி

24 “ மலை முன்றிற் குறுங்காற்கட்டில் ”

✍ மலை முன்றில் குறும் கால் கட்டில்

02. பின்வரும் சொற்களை பெயராகவும் வினையாகவும் வரும் வகையில் வாக்கியம் அமைக்குக.

01. அடி	பெயர் - இறைவனின் திருவடிகளை பணிந்திடுவோம் வினை - நான் பந்தினை அடித்தேன்
02. அமர்	பெயர் - இரு நாட்டு அரசர்கள் அமர் செய்தனர் வினை - மாணவர்கள் கதிரையில் அமர்ந்தனர்
03. அரை	பெயர் - என் உணவில் அரைப் பங்கினை தம்பிக்கு கொடுத்தேன் வினை - அம்மா மாவை அரைத்தார்
04. இழை	பெயர் - தமயந்தி அழகிய ஆபரணங்களை அணிந்தாள் வினை - பாட்டி பாய், தட்டு என்பவற்றை இழைத்தார்
05. படை	பெயர் - படைவீரர்கள் அணிவகுத்து நின்றனர் வினை - நாம் இறைவனுக்கு பொங்கல் படைத்தோம்
06. பறி	பெயர் - குமார் மீன்பறியில் மீனை வாங்கினான் வினை - மாலா ரோஜா செடியில் மலரை பறித்தாள்
07. மறை	பெயர் - வேதத்தின் மறு பெயர் மறை எனப்படும் வினை - கதிரவன் மேற்கு வானில் மறைந்தான்
08. கரை	பெயர் - நான் கடற்கரையில் விளையாடி மகிழ்ந்தேன் வினை - காகம் வானில் கரைந்து சென்றது
09. படி	பெயர் - மாணவர்கள் படிக்கட்டில் ஏறி நின்றனர் வினை - ரோஜா பரீட்சைக்காகப் படித்தாள்
10. உடு	பெயர் - வானில் உடுத்தொகுதி தென்பட்டது வினை - அம்மா அழகிய சேலை உடுத்தாள்

www.ikedu.lk

03. செய்வினைச் வாக்கியங்களை செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. அவன் பொருட்களை வண்டியில் ஏற்றினான்

   ✍ அவனால் பொருட்கள் வண்டியில் ஏற்றப்பட்டது

2. நான் கவிதை இயற்றினேன்

   ✍ கவிதை என்னால் இயற்றப்பட்டது

3. புகழேந்தி நளவெண்பாவை பாடினார்

   ✍ நளவெண்பா புகழேந்தியால் பாடப்பட்டது.

4. மக்கள் பயிர் செய்வதற்காக காடுகளை அழித்தனர்

   ✍ காடுகள் பயிர்செய்வதற்காக மக்களால் அழிக்கப்பட்டன.

5. கர்ணன் அம்பு எய்தான்

   ✍ அம்பு கர்ணனால் எய்யப்பட்டது

6. மாடுகள் வயலை உழுதன

   ✍ வயல் மாடுகளால் உழப்பட்டது.

7. குமார் இரண்டு குருவிகளைப் பிடித்தான்

   ✍ குமாரால் இரண்டு குருவிகள் பிடிக்கப்பட்டன
   இரண்டு குருவிகள் குமாரால் பிடிக்கப்பட்டன

07. எழுவாய், பயனிலைகளை இணங்காணல்

1. மடத்தலையில் ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம்

   எழுவாய் - கொக்கு
   பயனிலை - வாடியிருக்குமாம்

2. அக்னிச் சுவாலை மேலெழுவதைப் போல நாவலர் எழுந்தார்.

   எழுவாய் - நாவலர்
   பயனிலை - எழுந்தார்.

3. அம்மாவின் மூக்குத்தி மின்னல் கீற்றினைப் போல் மின்னியது

   எழுவாய் - மூக்குத்தி
   பயனிலை - மின்னியது

4. கதிர் மூழ்கிற்று அப்பால் நெடுங்கடலினுள்

   எழுவாய் - கதிர்
   பயனிலை - மூழ்கிற்று

5. கூரையைப் பிய்த்துக் கொண்டு பலமாக வீசியது காற்று.

   எழுவாய் - காற்று
   பயனிலை - வீசியது

www.lkedu.lk

08.வாக்கியத்தில் உள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக

1. முன்னாள் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி விழாவுக்கு வருகை தந்தார்

✍ யாழ் மேல் நீதி மன்ற முன்னாள் நீதிபதி விழாவுக்கு வருகை தந்தார்

2. மலைநாட்டில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது

✍ மலைநாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக நிலவுகின்றது.

3. நவீன மயப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

✍ மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது

4. ஓய்வு பெற்ற இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு மதிப்பளிப்பு செய்யப்பட்டது

✍ இலங்கையின் ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்களுக்கு மதிப்பளிப்பு செய்யபட்டது.

5. நவீன மயப்படுத்தப்பட்ட அங்காடி மக்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது

✍ மக்களுக்கு நவீன மயப்படுத்தப்பட்ட அங்காடி மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது

6. பிரசித்தி பெற்ற இலங்கையின் தமிழ் எழுத்தாளர்கள் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டனர்

✍ தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கையின் பிரசித்தி பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்

09. தலமைத் தொடர். சார்புத் தொடர் என்பவற்றை இணங்காண்க.

1. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

தலமைத் தொடர் - அமைச்சர் கூறினார்.
சார்புத் தொடர் - மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

2. குறித்த நாளில் பரீட்சை நடைபெறும் என பரீட்சை அதிகாரி அறிவித்தார்

தலமைத் தொடர் - பரீட்சை அதிகாரி அறிவித்தார்
சார்புத் தொடர் - குறித்த நாளில் பரீட்சை நடைபெறும்

3. நீ கவனமாக படித்தால் பரீட்சையில் சித்தியடைவாய்

தலமைத் தொடர் - நீ பரீட்சையில் சித்தியடைவாய்
சார்புத் தொடர் - கவனமாக படித்தால்

4. சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் எனக் காந்தியடிகள் கூறினார்.

தலமைத் தொடர் - காந்தியடிகள் கூறினார்
சார்புத் தொடர் - சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்.

5. தனக்கு சீடர்கள் அனைவரும் குருதட்சணை தர வேண்டும் எனத் துரோணர் கூறினார்.

தலமைத் தொடர் - துரோணர் கூறினார்.
சார்புத் தொடர் - குருதட்சணை தர வேண்டும்

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

10. தனிவாக்கியங்களை கூட்டு வாக்கியமாக்கி எழுதுதல்

1.. கண்ணன் பாடல் பாடுவதில் சிறந்தவன்
கண்ணன் தமிழ் கற்பிப்பதில் சிறந்தவன்

- ✍ கண்ணன் பாடல் பாடுவதிலும் தமிழ் கற்பிப்பதிலும் சிறந்தவன்

2. இராமன் கருணை வடிவானவன்
இராமன் சீதை மீது அன்பு கொண்டவன்

- ✍ கருணை வடிவான இராமன் சீதை மீது அன்பு கொண்டவன்.

3. கமல் பாடசாலை சென்றான்
விமல் கோவிலுக்கு சென்றான்

- ✍ கமல் பாடசாலைக்கும் விமல் மைதானத்திற்கும் சென்றனர்

4. பிரணவி பாடம் படிப்பாள்
பிரணவி தொலைக்காட்சி பார்ப்பாள்

- ✍ பிரணவி பாடம் படிப்பாள் அல்லது தொலைக்காட்சி பார்ப்பாள்.

11. கூட்டு வாக்கியங்களை தனி வாக்கியமாக்கி எழுதுதல்.

1.. வயலுக்கு குளத்திலிருந்தும் வாய்க்காலிலிருந்தும் நீர் இறைத்தனர்.

- ✍ வயலுக்கு குளத்திலிருந்து நீர் இறைத்தனர்
- ✍ வயலுக்கு வாய்க்காலிலிருந்து நீர் இறைத்தனர்

2. இராவணன் படை வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் தாக்கியது

- ✍ இராவணன் படை வடக்கிலிருந்து தாக்கியது
- ✍ இராவணன் படை தெற்கிலிருந்து தாக்கியது

3. விமலா கறுப்பு நிறம் கொண்டவள் ஆனால் அழகானவள்

- ✍ விமலா கறுப்பு நிறம் கொண்டவள்
- ✍ விமலா அழகானவள்

4. கம்பர் கம்பராமாயணம், சடகோப அந்தாதி என்பவற்றை இயற்றினார்.

- ✍ கம்பர் கம்பராமாயணம் இயற்றினார்
- ✍ கம்பர் சடகோப அந்தாதி இயற்றினார்.

www.ikedu.lk